**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| Spl. Sessions Case No. | : | 21/2023 (Mother Case in S.C.No. 48/2021) |
| | : | Prosecution - **PW-9** |
| Deposition of witness for | : | Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : பிரகாஷ் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 03rd day of July 2025.

(7 ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி ஆஜர். 9 ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆஜர் இல்லை. 9 ஆம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு நிபந்தனையுடன் அனுமதிக்கப்பட்டது. நீதிமன்றத்திற்கு வராத எதிரியின் அடையாளத்தை மறுக்கக்கூடாது என்ற நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

**மாலை 6 மணி முதல் 6.30 மணி வரை**

நான் பெட்டவாய்தலையில் எனது அக்கா வீட்டில், சலூான் கடையில் வேலை செய்து வருகிறேன். சாட்சிகளான அரசகுமார் கடையில்தான் நான் வேலை செய்தேன். வேலாயுதம்பாளையம் பை பாஸ் ரோட்டில் எஸ்.கே. சலூான் என்ற கடையை அரசகுமார் வைத்திருந்தார், நான் அதில் பணியாளராக இருந்தேன். வழக்கில் இறந்துபோன அஜித்குமாரை எனக்கு தெரியும். 16.12.2020 அன்று முசிறி செல்கிறேன் என்று கூறிவிட்டு ரஞ்சித்குமார் என்னிடம் அவர் இருசக்கர வாகனத்தின் சாவியை கொடுத்துவிட்டு சென்றார். ஸ்டாண்டில் நிறுத்தியதற்காக இருசக்கர வாகனத்தின் சாவி மற்றும் டோக்கன் ஆகியவற்றை கொடுத்துவிட்டு சென்றார். முசிறி சென்று வருவதாக கூறினார். 17.12.2020 அன்று மதியம் 12-1 மணிக்கு முசிறி சென்றுவிட்டு ஐஸ்கூல் மேடு முருகானந்தம் வீட்டிற்கு என்னுடைய உரிமையாளர் அரசகுமாருடன், ரஞ்சித்குமார் வந்து வீட்டிற்கு வந்து சாவியை கேட்டு வாங்கி சென்று அரசகுமாரும், ரஞ்சித்குமாரும் முடிதிருத்தம் செய்யும் கடைக்கு சென்றுவிட்டு அங்கிருந்து இருவரும் தனித்தனியே இரண்டு இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். அரசகுமார் டி.வி.எஸ்.50, ரஞ்சித்குமார் பல்சர் வண்டியில் மீண்டும் என்னை மேற்சொன்ன இடத்தில் வந்து பார்த்தனர். மீண்டும் என்னை வந்து அரசகுமாரும், ரஞ்சித்குமாரும் பார்க்கும்போது என்னுடன் முருகானந்தமும் இருந்தார். பின்னர் வேலாயுதம்பாளையம், மூலிமங்கலம் பிரிவில் உள்ள டாஸ்மாக் கடைக்கு ரஞ்சித்குமார் வாகனத்தில் நானும், அரசகுமார் வாகனத்தில்

முருகானந்தமும் மேற்சொன்ன டாஸ்மாக் கடைக்கு சென்றோம். நானும், ரஞ்சித்குமாரும் டாஸ்மாக் கடைக்குள் சென்றோம், அப்போது டாஸ்மாக் கடைக்கு சிறிது துாரத்தில் உள்ள பெட்ரோல் பங்க் அருகில் முருகானந்தமும், அரசகுமாரும் நின்றுகொண்டிருந்தார்கள். டாஸ்மாக் கடையில் நாங்கள் யாரையும் பார்க்கவில்லை. டாஸ்மாக் கடையில் இரண்டு மதுபாட்டிலை வாங்கிக்கொண்டு பக்கத்தில் உள்ள 91 பேக்கரி கடைக்கு சென்றோம். அங்கு தண்ணீர் பாட்டில் வாங்க இறங்கி நின்றோம். அப்போது முன்னாடி ஒரு இருசக்கர வாகனம் வந்தது. அந்த வாகனத்தில் மூன்று நபர்கள் வந்தார்கள். அந்த மூன்று நபர்களும் ரஞ்சித்குமாரை துரத்தினார்கள். அந்த மூன்று பேர்களுக்கு பின்னாலும் நான்கு, ஐந்து நபர்கள் சென்றிருப்பார்கள். எனக்கு முன்னால் ரஞ்சித்குமாரை வெட்டிக்கொண்டிருந்தார்கள். சுமார் 20-30 அடி இருக்கும். ரஞ்சித்குமாரை வெட்டிக்கொண்டிருந்தார்கள். நான் பார்த்ததும் ஓடிவிட்டேன். அப்போது நான் வண்டியிலிருந்து இரண்டு குவாட்டார் பாட்டில்களை எடுத்துக்கொண்டு பெட்ரோல்பங்க் வரை ஓடினேன். பெட்ரோல் பங்கில் நின்றுகொண்டிருந்த முருகானந்தம் மற்றும் அரசகுமாரிடம், ரஞ்சித்குமாரை சுமார் 4, 5 நபர்கள் வெட்டிய விபரத்தை கூறினேன். அதன் பிறகு பயத்தில் நான் வீட்டிற்கு ஓடிவிட்டேன். ஆஜர் எதிரியை அந்த வெட்டிய நபரில் ஒருவரா என்று என்னால் சொல்ல இயலாது. அதன் பிறகு TNPL ல் பணிசெய்யும் என் சகோதரர் ரஞ்சித்குமார் இறந்துவிட்டார் என்ற தகவலை என்னிடம் போன் மூலம் சொன்னார். அதன் பிறகு காவல் நிலையம் வரச்சொன்னார்கள், நான் காவல் நிலையம் சொன்னேன். காவல் நிலையத்தில் நீங்கள் எதிரியை அடையாளம் காண்பீத்தீர்களா

என்றால் காவல் நிலையத்தில் யாரும் இல்லை, என்னை மட்டும்தான் விசாரித்தார்கள். காவல் துறையினர் விசாரித்தபோது யார், யார் வெட்டினார்கள் மற்றும் அவர்கள் வந்த வாகனத்தின் அடையாளங்கள் போன்ற விபரங்கள் காவல் துறையினர் விசாரித்தபோது நீங்கள் கூறினீர்களா என்றால் இல்லை.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

ஒம்/- K.H.இளவழகன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.